ஞாயிற்றுக்கிழமை 10.1.2010 சென்னை

தமிழ் ஓசை

# இரண்டு மாதக் குழந்தைக்கு நுண்துளை மருத்துவம்

சென்னை, சன. 10-

பிறந்து 2 மாதங்களே ஆன குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதை சிறீ இராமச்சந்திரா மருத்துவமனை மருத்துவர்கள் நுண்துளை மருத்துவம் மூலம் சரி செய்து குழந்தையை பிழைக்க வைத்துள்ளனர்.

பிறந்து 2 மாதங்களே ஆன குழந்தை ஒன்று மூச்சுத் திணறலால் அவதியுற்ற நிலையில், சிறீ இராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. இந்த மருத்துவமனையில் குழந்தைநல மருத்துவர் குழந்தையின் மார்பு பகுதியை ஸ்கேன் எடுத்துப் பார்த்தார். அப்போது உணவு குழாய்க்கும், மூச்சுக் குழாய்க்கும் இடையே வீக்கம் ஏற்பட்டதால், குழந்தை மூச்சுத்திணறல் ஏற்பட்டு அவதியுற்றது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து நெஞ்சுப்பகுதியை அறுவை மருத்துவம் செய்து திறக்காமல், 3 மில்லிமீட்டர் அளவுக்கு ஒரு துளை போட்டு வீக்கம் அகற்றப்பட்டது. அடுத்த 12 மணி நேரத்தில் குழந்தைக்கு உணவு கொடுக்கப்பட்டது. எந்தவொரு வலியும், தழும்பும் இல்லாமல் குழந்தை உடல்நலம் தேறியுள்ளது. சிறீ இராமச்சந்திரா மருத்துவ நடுவத்தின் குழந்தைகளுக்கான அறுவை மருத்துவ வல்லுநர்களும், குழந்தைநல மருத்துவர்களும், மயக்க மருந்து அளிக்கும் மருத்துவர்களும் இந்த சாதனையைசெய்துள்ளனர் என்று இராமச்சந்திரா மருத்துவ நடுவ செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.